ச.வ.-பி 8/2007

# 2007ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம்

2007ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் 36ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஈ) மற்றும் (உ) என்னும் பந்திகளுடன் சேர்த்துவாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67ஆம் பிரிவின்கீழ் மின்சக்தி, வலு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

கொழும்பு, 2009, …………………….. மின்சக்தி, வலு அமைச்சர்.

## ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2009ஆம் ஆண்டின் உபகரணங்களின் வலுச் செயற்பாட்டு நியமங்கள் (கூட்டு உறிஞ்சியொளிவீசு விளக்குகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகளுக்கான 1ஆம் அட்டவணையின் IIஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டவாறான வலு மதிப்பீடுகளுக்கு நேரொத்ததாகவுள்ள அட்டவணையின் Iஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த செயற்பாட்டுத் தரப்படுத்தலுக்கு இசைந்தொழுகாத ஏதேனும் கூட்டு உறிஞ்சியொளிவீசு விளக்கை ஆளெவரும் இலங்கையினுள் இறக்குமதி செய்தலாகாது அல்லது இலங்கையில் உற்பத்தி செய்தலாகாது.

3. அதிகாரசபையானது, 1ஆம் அட்டவணையின் Iஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த செயற்பாட்டுத் தரப்படுத்தலுக்கு இசைந்தொழுகுவதனை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக, எவையேனும் கூட்டு உறிஞ்சியொளிவீசு விளக்குகளை இறக்குமதிசெய்பவரை அல்லது உற்பத்திசெய்பவரை, அத்தகைய இறக்குமதி செய்பவரினால் அல்லது உற்பத்திசெய்பவரினால் விடயத்துக்கேற்ப, இறக்குமதிசெய்யப்படுகின்ற அல்லது உற்பத்திசெய்யப்படுகின்ற எவையேனும் கூட்டு உறிஞ்சியொளிவீசு விளக்குகள் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட செயற்பாட்டுத் தரப்படுத்தலுக்கு இசைந்தொழுகுகின்றனவெனச் சான்றுப்படுத்தி இலங்கை நியமங்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றைச் சமர்ப்பிக்கும்படி தேவைப்படுத்துவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சான்றிதழ் சான்றில் ஏல்தகவுடையதாதலும், அதன்கண் அடங்கியுள்ள நிகழ்வுகளின் முதற்றோற்ற அளவிலான எண்பிப்பாக ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

4. இரண்டாம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகுகின்ற எவையேனும் கூட்டு உறிஞ்சியொளிவீசு விளக்குகளை இலங்கையினுள் இறக்குமதி செய்கின்ற அல்லது இலங்கையில் உற்பத்தி செய்கின்ற ஒவ்வோராளும், இவ்வொழுங்குவிதிகளுக்கான 1ஆம் அட்டவணையின் IIஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டவாறாக ஏற்புடையற்பாலதான வலு மதிப்பீட்டை வெளிக்காட்டி இவ்வொழுங்குவிதிகளுக்கான 2ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான படிவத்துக்கும், பரிமாணங்களுக்கும், அளவுக்கும் இசைந்தொழுகுகின்ற வலுச் சுட்டுத்துண்டொன்றை உற்பத்திப் பொருளைக் கொண்டுள்ள உறையில் அல்லது சிப்பப் பொதித்தாளில் அல்லது பெட்டியில் ஒட்டிவைப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு வெளிக்காட்டப்பட்ட வலு மதிப்பீடு, வெளிக்காட்டப்பட்ட மதிப்பீட்டின் செம்மையைச் சான்றுப்படுத்துகின்றதும், இலங்கை நியமங்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டதுமான சான்றிதழொன்றின்மூலம் சரிபார்க்கப்படுதல் வேண்டும்.

5. ஆளெவரும், -

(அ) இவ்வொழுங்குவிதிகளின் 4ஆம் ஒழுங்குவிதியினால் விதிக்கப்பட்ட தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகாத; அல்லது

(ஆ) அக்குறிப்பிட்ட கூட்டு உறிஞ்சியொளிவீசு விளக்கின் ஆகக்குறைந்த செயற்பாட்டுத் தரப்படுத்தலுக்கு நேரொத்ததாகவிராத மதிப்பீடொன்றைக் கொண்டுள்ள அல்லது வெளிக்காட்டுகின்ற,

வலுச் சுட்டுத்துண்டொன்று, உற்பத்திப் பொருளைக் கொண்டுள்ள உறையில் அல்லது சிப்பப்பொதித்தாளில் அல்லது பெட்டியில் ஒட்டப்பட்டதாகவிருக்கின்ற, இலங்கையினுள் இறக்குமதிசெய்யப்பட்டதாயினுஞ்சரி அல்லது இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டதாயினுஞ்சரி, ஏதேனும் கூட்டு உறிஞ்சியொளிவீசு விளக்கைக் களஞ்சியப்படுத்துதலோ, வெளிக்காட்டுதலோ, ஒன்றில் மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பனை செய்தலோ, விற்பனைக்கு முனைதலோ அல்லது விநியோகித்தலா ஆகாது.

6. சட்டத்தில் அடங்கியுள்ள ஏற்பாட்டைப் பின்பற்றி இவ்வொழுங்குவிதிகளின் 2ஆம், 4ஆம் அல்லது 5ஆம் ஒழுங்குவிதிகளினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறியமைக்கான தவறுக்காக ஆளொருவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், தவறுக்காக விதிக்கப்பட்ட தண்டத்துடன் சேர்த்து மேலதிகமாக, எந்தக் கூட்டு உறிஞ்சியொளிவீசு விளக்குகள் தொடர்பாகத் தவறுபுரியப்பட்டதோ அந்தக் கூட்டு உறிஞ்சியொளிவீசு விளக்குகள், விடயத்துக்கேற்ப, கையாண்டுதீர்க்கப்படுவதற்காகவும் அல்லது அழித்துவிடப்படுவதற்காகவும், அத்தகைய கையாண்டுதீர்க்கப்படுகின்றமைக்காக அல்லது அழித்துவிடப்படுகின்றமைக்காகப்

பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும் கட்டளையொன்றை ஆக்கும்படி அத்தகைய தண்டத்தை விதிக்கின்ற நீதிமன்றத்துக்கு வேண்டுகோள்விடுப்பதற்கு அதிகாரசபையானது உரித்துடையதாதல் வேண்டும். அவற்றைக் கையாண்டுதீர்ப்பதற்காக அல்லது அழித்துவிடுவதற்காக உறப்பட்ட செலவுதொகையானது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளினால் பொறுக்கப்படுவதற்குச் சொல்லப்பட்ட கட்டளை ஏற்பாடு செய்தல் வேண்டுமெனவும் அதிகாரசபையானது வேண்டுகோள் விடுக்கலாம்.

7. இவ்வொழுங்குவிதிகளில் -

‘‘சட்டம்’’ என்பது, 2007ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம் என்று பொருளாகும்;

’’அதிகாரசபை’’ என்பது, 2007ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் 2ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை என்று பொருளாகும்; அத்துடன்

‘‘இலங்கை நியமங்கள் நிறுவனம்’’ என்பது, 1984ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, இலங்கை நியமங்கள் நிறுவனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை நியமங்கள் நிறுவனம் என்று பொருளாகும்.

**அட்டவணை 1**

[ஒழுங்குவிதி 2]

**ஆகக்குறைந்த செயற்பாட்டுத் தரப்படுத்தலுடனான வலு மதிப்பீடுகள்**


| **நிரை I** | **நிரை II** |
|---|---|
| செயற்பாட்டுத் தரப்படுத்தல் (PG) (செயற்பாட்டுத் தரப்படுத்தல் பின்வரும் சூத்திரத்தின்படி கணிக்கப்படுகின்றது:- செயற்பாட்டுத் தரப்படுத்தல் = செயற்படுத்தும் திறன் x 0.9 + மின்சக்திக் காரணி x100x0.1+ வர்ணத் திருத்தக் குணகம்) | வலு மதிப்பீடு (நட்சத்திரங்களினால் சுட்டிக் காட்டப்படுகின்றது) |
| $PG>70$ | ஐந்து நட்சத்திரங்கள் ***** |
| $65<PG\leq70$ | நான்கு நட்சத்திரங்கள் **** |
| $58<PG\leq65$ | மூன்று நட்சத்திரங்கள் *** |
| $54<PG\leq58$ | இரண்டு நட்சத்திரங்கள் ** |
| $50\leq PG\leq54$ | ஒரு நட்சத்திரம் * |


## அட்டவணை 2


[ஒழுங்குவிதி 4]


### வலுச் சுட்டுத்துண்டுகளின் படிவமும், பரிமாணங்களும், அளவும்


உரு 1: வேறுபட்ட மதிப்பீடுகளுக்கான வலுச் சுட்டுத்துண்டுகள்







சுட்டுத்துண்டின்மேல் வளைவுப் பகுதியின்மீது நீல நிறமுள்ள பின்னணியில் ஒளிர்வு கொடுக்கப்பட்ட மஞ்சள் வர்ண நட்சத்திரங்களின் எண்ணிக்கை வலு மதிப்பீட்டைக் குறிக்கின்றது. மத்தியிலுள்ள இலக்கம் அதனை இலக்கரீதியாக வெளிக்காட்டுகிறது. சுட்டுத்துண்டானது, தரப்பட்ட இடைவெளியில் அச்சிடப்படவேண்டிய கீழே குறிப்பிடப்படும் தகவலை அத்தியாவசியமாகக் காட்டுதல் வேண்டும்:

- உண்மையான மின்சக்திப்பாவனை (வோட்டுக்களில்)
- உண்மையான மின்சக்திப்பாவனையை அடிப்படையாகக் கொண்ட மாதாந்த மின்சாரப்பாவனை
- மாதிரி இலக்கம்
- தொழிற்சின்னம்

உரு 2: சுட்டுத்துண்டின் உண்மையான அளவு




உரு 3: சுட்டுத்துண்டின் பரிமாணங்களும் இலக்கங்களின் அளவுகளும்

